# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2023. 10. 24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைச் சட்டக்கோவை (திருத்தம்)

**1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 25.00 — தபாற் செலவு : ரூபா 50.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன், மாற்றீடு செய்யப்பட்ட வாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்ளுதல், வழக்குகளைக் கைமாற்றுதல் பற்றிய நடைமுறைக்கும் மற்றும் தொடர்புபட்ட கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது – (அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 7(1)(அ) எனும் பிரிவினுள்ளும் மற்றும் 7(1)(ஈ) எனும் பிரிவினுள்ளும் வருகின்ற பிணக்குகளின் பணப்பெறுமதியை அதிகரிப்பதாகும்; (ஆ) ஒழுங்குவிதிகள் எனும் வழிவகைமூலம் பணப் பெறுமதிகளை நிர்ணயிப்பதற்கு அமைச்சரை இயலச் செய்விப்பதற்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதாகும்; அத்துடன் (இ) 6 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின்கீழ் வருகின்ற பிணக்கொன்று தொடர்பிலான ஏதேனும் விண்ணப்பத்தை ஒரு மத்தியஸ்த சபையானது சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்தின் தவிசாளருக்கு ஆற்றுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தவிசாளருக்கு அல்லது பிரதம மத்தியஸ்தருக்கு பின்வருவனவற்றுக்குத் தத்துவமளிப்பதாகும் -(அ)தீர்வு சாத்தியமில்லாதவிடத்து, தீர்க்காமை பற்றிய சான்றிதழொன்றை பிணக்காளர்களுக்கு வழங்குதல்; அத்துடன்(ஆ)ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கொன்றின் விடயத்தில், மத்தியஸ்தம் மூலம் பிணக்கைத் தீர்ப்பதற்கு இயலாததாக விருந்ததெனக் குறிப்பிட்டு, அந்நீதி மன்றத்திற்கு அறிக்கையொன்றை வழங்குதல்.

ச.வ.ஓ - 78/2021

**1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ……. ஆம் இலக்க, மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் இடப்படுகின்றது:-

"ஆணைக்குழுவை நியமித்தல்

2(1) சனாதிபதியானவர், (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஐந்து ஆட்களைக்கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும்; அவர்களுள் இருவர் உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரைமூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தில் நீதித்துறைப் பதவி வகித்துள்ள ஆட்களிலிருந்தும் மற்றும் அவர்களுள் மூவர் -

(அ) சட்டத்தரணியாக பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ள;

(ஆ) இலங்கை நிருவாக சேவையில் அல்லது தீவளாவிய சேவையொன்றில் 1 ஆம் வகுப்பு அலுவலர்கள் பதவிகளை வகித்துள்ள;

(இ) பகிரங்கசேவையில் இளைப்பாறிய பதவிநிலை அலுவலர்களாகவுள்ள; அல்லது

(ஈ) மத்தியஸ்தத்தில் அல்லது வேறு ஏதேனும் மாற்று பிணக்குத்தீர்த்தல் செயல்முறையில் உயர்தொழில்சார் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள தனியார் துறையிலுள்ள முகாமைத்துவ மட்டப் பதவிகளை வகித்துள்ள,

ஆட்களிலிருந்தும் நியமிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில், சனாதிபதியானவர், ஆணைக்குழுவின் உறுப்பாண்மை இலங்கைச் சமூகத்தின் பன்மைத்துவப் பண்புக்கூறுகளைப் பிரதி பலிப்பதாகவிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) நியமனத் தேதியில் எழுபது வயதை அடைந்துள்ள ஆளெவரும் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுதலாகாது.

(3) சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான நீதித்துறைப் பதவி வகித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(4) தவிசாளரும் ஆணையாளர்களும், அவர்களுள் எவரேனும் ஒருவர் முன்னரே இறந்தால், பதவியிலிருந்து விலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளரின் அல்லது ஆணையாளர்களின் பதவிக்காலம்

முடிவுறும்போது ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாதிருப்பின், அத்தகைய முடிவுறுகைக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் தவிசாளரும் ஆணையாளர்களும், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரை பதவியில் தொடர்ந் திருத்தல் வேண்டும்.

(5) தமது பதவிக்காலம் முடிவுற்றதன்மேல் பதவியை வறிதாக்குகின்ற தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர், (2) ஆம் உட்பிரிவுக் கமைய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(6) (அ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப் பப்படும் கடிதம்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(ஆ) ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு நியாயமான காரண மின்றி வருகைதராதிருக்கும் தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர், எந்த கூட்ட மொன்றுக்கு அத்தகைய ஆணையாளருக்கு முறையான அறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளதோ அந்தக் கூட்டமொன்றில் அத்தகைய ஆணைக்குழுவின் தீர்மானத்தின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்படலா மென்பதுடனும் அத்தீர்மானம் சனாதிபதியினால் புறக்குறிப்பிடப்பட்டிருத்தலும் வேண்டும்.

(இ) சனாதிபதி, காரணமொன்றைக் குறித்தளிக்காமல் தவிசாளரை அல்லது எவரேனும் ஆணையாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) பதவியிலிருந்து விலகியுள்ள அல்லது அகற்றப்பட்டுள்ள தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர், மீள நியமிக்கப் படுவதற்குத் தகவுடையவராதல் ஆகாது.

(8) (அ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் இறப்பதன், பதவிவிலகுவதன் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக ஆணைக் குழுவில் ஏதேனும் வெற்றிடம் எழுதுமிடத்து, சனாதிபதி (1) ஆம், (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புதல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் அல்லது எவரேனும் ஆணையாளர் இறப்பதால், பதவிவிலகுவதால் அல்லது பதவியகற்றப்படுவதால் எழுகின்ற வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு நியமிக்கப்படுகின்ற ஆளெவரும் அவரது முன்னுறுபவரின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) சுகவீனம் காரணமாக அல்லது வேறு உடற்குறைபாடு காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, ஆணையாளரொருவர் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகுமிடத்து, அத்தகைய இயலாமை அல்லது இல்லாமைக் காலப்பகுதிக்காக அவரது இடத்தில் செயலாற்றுவதற்குத் தகுதியான ஆளொருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்; அத்துடன் அவ்வாறு இயலாதவராகவுள்ள அல்லது இலங்கையில் இல்லாதவராகவுள்ள ஆணையாளர் ஆணைக்குழுவின் தவிசாளராக இருக்குமிடத்து, ஆணைக் குழுவின் தவிசாளரால் கடமைகள் மீள மேற்கொள்ளப்படும்வரையில், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான நீதித்துறைப் பதவியை வகித்துள்ள வேறு

ஆணையாளரை சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(10) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும், தவிசாளருக்கும் ஆணையாளர்களுக்கும் ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

(11) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான நீதித்துறைப் பதவி வகித்துள்ள உறுப்பினரொருவர் உள்ளடங்கலாக ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண்ணாக அமைதல் வேண்டும் என்பதுடன், தவிசாளர் அல்லது தவிசாளர் வருகைதராதவிடத்து கூட்டத்தில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான நீதித்துறைப் பதவியை வகித்துள்ள ஆணையாளர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு எவரேனும் ஆணையாளர், ஆணைக்குழுவின் அத்தகைய கூட்டங்களில் தலைமை தாங்குதலும் வேண்டும். ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்கொண்டு நடாத்துதல் தொடர்பிலும், அதனது சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(12) தவிசாளரின் அல்லது எவரேனும் ஆணையாளரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாட்டின் காரணமான மட்டும், ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

3. முதன்மைச்சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(1அ) ஒவ்வொரு மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரொருவர் இருத்தல் வேண்டும்; அவர், அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்துக்கு இணைப்புச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய அலுவலர், அத்தகைய பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ள ஏதேனும் மத்தியஸ்த சபைக்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்தின் தவிசாளருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், இரகசியத்தன்மையைப் பேணும் நோக்கங்களுக்காக, அத்தகைய அலுவலர், குழாத்தின் தவிசாளரினால் அவ்வாறு செய்வதற்கு எழுத்தில் அதிகார மளிக்கப்பட்டாலொழிய அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தைத் திறத்தலாகாது.

(1ஆ) (அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப் பினும், 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச்சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்தின் தவிசாளருக்குச் செய்யப்பட்டுள்ள (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்கொன்று தொடர்பிலான விண்ணப்பமொன்று, அத்தகைய தவிசாளர் அங்ஙனம் முடிபுசெய்தால், இச்சட்டத்தின்கீழ் அதே இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்தின் தவிசாளருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்ப மொன்று, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட விண்ணப்பமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்."

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

4. முதன்மைச்சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியை"

என்னும் சொற்களுக்குப் பதிலாகப், "ஒரு மில்லியன் ரூபா பெறுமதியை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "ஐயாயிரம் ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாகப், "ஒரு இலட்சம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "14அ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழை" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையொன்றை அல்லது 14அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழொன்றை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) அமைச்சர், இச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயப்பொருளின் பணப் பெறுமதியை காலத்திற்குக்காலம் திருத்தலாம்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்

5. முதன்மைச்சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:"

ஏதேனும் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட குழாத்தினது தவிசாளருக்கு விண்ணப்பம் ஒன்றை ஆற்றுப்படுத்துதல்

9அ. (1) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் வகுதியினவான பிணக்கு களின்கீழ் வருகின்ற பிணக்கொன்று

தொடர்பான விண்ணப்பமொன்று, இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மத்தியஸ்த சபையொன்றுக்கு ஆற்றுப்படுத்தப் பட்டுள்ளவிடத்து, அத்தகைய மத்தியஸ்த சபையானது, தன்னியக்கத்தால் அத்தகைய விண்ணபத்தை 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச்சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதே இடப்பரப்புக்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ் தர்கள் குழாத்தின் தவிசாளருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் -

(அ) 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் மத்தியஸ்தர்கள் குழாம் நியமிக்கப்பட்டிராத விடத்து; அல்லது

(ஆ) ஒன்பதாம் பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட மத்தியஸ்த சபையொன்று, அதே விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்காக 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த விசேட வகுதி களைச்சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு மூன்று மாத காலப்பகுதியினுள் விண்ணப் பத்தை ஆற்றுப்படுத்தத் தவறுகின்றவிடத்து,

அத்தகைய விண்ணப்பகாரர், ஆணைக் குழுவிடமிருந்து அப்பொருள்பட ஆவண மொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட குழாத்தின் தவிசாளருக்கு விண்ணப்ப மொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமானது, 14அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தீர்க்காமைக்கான சான்றிதழொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பிணக்குக்கான திறத்தவர்கள் 9 ஆம் பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப் பட்ட மத்தியஸ்த சபையின் வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதன்மூலம் தீர்வொன்றுக்கு வருவதற்கு ஆட்சேபனை தெரிவித்திராதவிடத்து, (3) ஆம் உட் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்க்கா மைக்கான சான்றிதழொன்று அல்லது இச்சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கை களில் அடையப்பட்ட தீர்வொன்று, 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் நியதிகளின்படி முறையான மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு விண்ணப்பம் செய்யப்படவில்லை என்ற காரணத்துக்காக மட்டும் செல்லுபடியற்ற தாகக் கருதப்படுதலாகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

“தீர்வுகாண முடியாதவிடத்து

12 (1) தவிசாளர் அல்லது பிரதம மத்தியஸ்தர், தீர்த்துவைக்கப்படாமைக் கான பின்வரும் எவையேனும் காரணங் களை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்

குறிப்பிட்டு, 14அ என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, 6 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில் தவிசாளரினால் அல்லது பிரதம மத்தியஸ்தரினால் கையொப்ப மிடப்பட்ட அப்படிவத்தில் தீர்க்காமைக்கான சான்றிதழொன்றைப் பிணக்காளர்களுக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) முறையான அறிவித்தலின் பின்னர் அல்லது விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்ற பின்னர், இவற்றுள் எது முதலில் நிகழ்கிறதோ அதன் பின்னர், தொடர்ச்சியான இரு தேதிகளில் பிணக்காளர்களுள் ஒருவர் தோன்றாமை காரணமாக, 9 ஆம் பிரிவின்கீழ் சபையொன்றை அமைத்துருவாக்குவதற்கு இயலாதிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) 9 ஆம் பிரிவின்கீழ் சபையொன்று அமைத்துருவாக்கப்பட்டிருப்பதன் மேல் –

(i) பிணக்காளர்கள் தீர்வொன்றுக்கு உடன்படாதவிடத்து; அல்லது

(ii) முறையான அறிவித்தலின் பின்னர் பிணக்காளர்களுள் ஒருவர் வருகைதராமையின் காரணமாக தீர்வொன்றுக்கு வருவதற்கு இயலாதுள்ள விடத்து; அல்லது

(iii) விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்றதன் பின்னர், பிணக்காளர்களுள் ஒருவர், 14அ என்னும் பிரிவின்கீழான சான்றிதழொன்றை வழங்குமாறு கோருகின்றவிடத்து.

(2) தவிசாளர் அல்லது பிரதம மத்தியஸ்தர், 7 ஆம் அல்லது 8 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கொன்றின் விடயத்தில், மத்தியஸ்தம் மூலம் பிணக்கைத் தீர்ப்பதற்கு இயலாதிருந்ததெனக் குறிப்பிட்டும் தீர்த்துவைக்கப்படாமைக்கான பின்வரும் எவையேனும் காரணங்களை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் குறிப்பிட்டும், தவிசாளரினால் அல்லது பிரதம மத்தியஸ்தரினால் கையொப்பமிடப்பட்ட அப்படிவத்திலான அறிக்கையொன்றை அத்தகைய நீதிமன்றத்திற்கு வழங்குதல் வேண்டும் :-

(அ) முறையான அறிவித்தலின் பின்னர் அல்லது விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுற்ற பின்னர், இவற்றுள் எது முதலில் நிகழ்கிறதோ அதன் பின்னர், தொடர்ச்சியான இரு தேதிகளில் பிணக்காளர்களுள் ஒருவர் தோன்றாமை காரணமாக, 9 ஆம் பிரிவின்கீழ் சபையொன்றை அமைத்துருவாக்குவதற்கு இயலாதிருக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) 9 ஆம் பிரிவின்கீழ் சபையொன்று அமைத்துருவாக்கப்பட்டிருப்பதன் மேல் –

(i) பிணக்காளர்கள் தீர்வொன்றுக்கு உடன்படாதவிடத்து; அல்லது

(ii) முறையான அறிவித்தலின் பின்னர் பிணக்காளர்களுள் ஒருவர் வருகைதராமையின் காரணமாக தீர்வொன்றுக்கு வருவதற்கு இயலாதுள்ள விடத்து.''

ஐயத்தைத் தவிர்த்தல்

7. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியில் ஆணைக்குழுவின் தவிசாளராகவும் ஆணையாளர்களாகவும் பதவிவகிக்கின்ற ஆட்கள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும்வரை, அச்சட்ட வாக்கத்தின்கீழான தத்துவங்களையும் கடமைகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் வேண்டுமென்றும் அத்துடன் அத்தகைய ஆணைக்குழுவானது எத்தேதியன்று நியமிக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அத்தகைய தவிசாளராகவும் ஆணையாளர்களாகவும் பதவி வகிக்காதொழிதல் வேண்டுமென்றும் இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.